மாண்புமிகு சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, கொல்லி மலைப்பற்றி நான் சொன்னேன். கிராஷ் புரோகிராம், தீவிர திட்டம் இல்லை என்று சொன்னேன். அங்கே ஒரு 200 ஏக்கர் தோட்டக் கலை வளர்ச்சிக் காக ஒதுக்கப்பட்டு நிதி உதவி கொல்லிமலையில் உள்ள பழங்குடி மக்க ளின் நன்மைக்காக உரம் பாதி விலையிலும், பூச்சி கொல்லி மருந்து 10 சதவீதம் விலை குறைவிலும் கொடுக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி கொல்லிமலை பற்றியது. உதக மண்டலம், ஒசூர் பற்றியெல்லாம் கேள்விகள் வரக்கூடாது.

THIRU B. VENKATASWAMY: May I know from the Hon. Minister whether he will arrange for a crash programme for horticulture development in Tamil Nadu since there is great export potential?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, கிராஷ் புரோகிராம் என்ற அளவில் தீவிரத் திட்டம் எதுவும் நடைமுறையில் இல்லை. அதற்கான செயற்குறிப்பு இல்லை.

புதிய போக்குவரத்துக் கழகம்

*629. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

திருச்சி–புதுக்கோட்டை மாவட்டங்களுக்கு தனி போக்குவரத்துக் கழகம் அமைத்திட அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இல்லை.

எளாவூர் – அம்பத்தூர் பேருந்துப்பணி

*630 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா:

(அ) கும்முடிப்பூண்டி துணை வட்டம் எளாவூரிலிருந்து கும்முடிப் பூண்டி, செங்குன்றம், புழல் வழியே அம்பத்தூர் வரை பேருந்து விடும் செயற்குறிப்பு காலதாமதம் ஆவதேன்?

(இ) இது எப்போது நிறைவேறும்?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: (அ) & (இ) எளாவூரி லிருந்து கும்முடிப்பூண்டி, செங்குன்றம், புழல் வழியே அம்பத்தூர் தொழிற்பேட்டை வரை பேருந்து விடும் செயற்குறிப்பு எதுமில்லை.